**பிரெட்றிச் ஈபர்ட் மன்றம்-இலங்கை**

1965 ஆம் ஆண்டு பிரெட்றிச் ஈபர்ட் மன்றமானது முன்னாள் ஜனாதிபதி அமரர் ரணசிங்க பிரேமதாஸ அவர்களின் அழைப்பின் பேரில் முதன்முதலாக இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டது.

பிரெட்றிச் ஈபர்ட் மன்றமானது பல நாடுகளில் நீண்ட காலமாக தொடர்ந்து சேவையாற்றவில்லை. இது சிவில் சமூகத்துடனான முன் ஒப்பந்தத்துடன் தொழிற்சங்க அமைப்புகளோடு இணைந்து சேவையாற்றியது. பின்னர் கணிசமான அளவு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை சேர்ந்தவர்களை பங்காளர்களாக கொண்டு உள்ளூர் முன்னெடுப்பில் சிவில் சமூகம் தொடர்பான பல்வேறு பகுதிகளை உள்ளடக்குவதற்கு தமது இணைப்புகளை விரிவுப்படுத்திக்கொண்டது.

1974 ஆம் ஆண்டு பிரெட்றிச் ஈபர்ட் மன்றம் இலங்கை மன்றத்துடன் இணைந்து இலங்கை மன்றக் கல்லூரியை நிறுவியது குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாக அமைந்துள்ளது. மேலும் இலங்கை மன்றக்கல்லூரியின்செயற்திட்ட நோக்கங்கள் பின்வருமாறு அமைந்தன:

- ஜனநாயக ரீதியில் வாழ்க்கையில் நம்பிக்கையையும் புரிந்துணரவையும் விரித்தி செய்தல், மற்றும் மனித உரிமைகளை பாதுகாத்தல்
- ஜனநாயகத்தின் தூய்மையை பேணலும் ,சர்வதேச புரிந்துணர்வுடனான ஒத்துழைப்பு மற்றும் இன, மத, மொழி, பால் பேதமின்றி அனைவருக்குமான அடிப்படை சுதந்திரத்தையும் மனித உரிமையையும் இணக்கப்பாட்டுடன் செயற்படுத்துதலும்.
- அனைத்து அறிவுசார் துறைகளிலும் சமூக செயற்பாடுகளிலும் அறிவுத்திறனை மேம்படுத்தலும், இணக்கப்பாட்டுடன் செயற்படுத்தலும்

இலங்கை மன்றக் கல்லூரியானது அரசியல் கலந்துரையாடல்கள் ,சிவில் சமூகம், மற்றும் அரச சேவை தொடர்பாக நடத்தப்படும் பயிற்சி நிலையமாக அனைவராலும் இணங்காணப்பட்டது.

1984 ஆம் ஆண்டு பிரெட்றிச் ஈபர்ட் மன்றமானது இலங்கை தொலைக்காட்சி பயிற்சி நிலையத்தை நிறுவியதன் மூலம் நாட்டிற்கு இலத்திரனியல் ஊடக துறைக்கு பாரிய பங்களிப்பை வழங்கியது. இந்நிலையமானது ஊடகத்துறை ஈடுபாட்டாளர்களுக்கு தரம்மிக்க தொழில்சார் கல்வியினை வழங்கும் நிலையமாக விளங்குகிறது. பின்னர் பிரெட்றிச் ஈபர்ட் மன்றமானது இணக்கப்பாட்டுடனான ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை மன்ற கல்லூரியையும் இலங்கை தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தையும் இலங்கை மன்றத்திற்கு கையளித்தது.

பல ஆண்டுகளாக பிரெட்றிச் ஈபர்ட் மன்றமானது உள்நாட்டு சிவில் சமூக அமைப்புகளுடனும் அரசாங்க அமைப்புகளுடனும் நெருங்கிய தொடர்புடன் சேவையாற்றி சமூக மாற்றத்திற்கு பெரும் பங்காற்றி வருகின்றது. இது தொழிற்துறை சார்ந்த அமைப்புகளுடன் இணைந்து சேவையாற்றியமை தனிச்சிறப்பாகும். இவ்வாறு பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து சேவையாற்றிய காலப்பகுதிகளில்

பலதரப்பட்ட சிறந்த புத்தகங்களை வேறு நிறுவனத்தோடு இணைந்தும் தனியாகவும் வெளியிட்டுள்ளது.இவற்றுள் ஜனநாயகம் , பொருளாதாரம் ,தொழில், பால்நிலை, மாற்றுக்கொள்கை,தெற்காசிய ஒத்துழைப்பு என்பன உள்ளடங்கும். இம் மன்றமானது சமூக பொருளாதாரம் தொடர்பான பரப்புகளில் ஆய்வு கட்டுரைகளையும் செயற்திட்டங்களையும் மேற்கொள்ளவும் ஆதரவு வழங்கியுள்ளது.

பிரெட்றிச் ஈபர்ட் மன்றமானது தொடர்ந்தும் தனது பங்காளர்களுடன் பரஸ்பரமாக இணைந்து பல்வேறு முற்போக்கான நோக்கங்களை அடையும் முகமாக தொழிற்பட்டு வருகின்றது. தமது பங்காளர்களுடன் இணைந்து பல்வகைப்பட்ட செயற்பாடுகளைச் சிறந்த முறையில் வடிவமைப்பதில் ஓர் விரிவான பங்கை செலுத்தி வருகின்றது. இவ்வாறான செயற்திட்டங்கள் மூலம் சிறந்த வெளியீடுகளுடன் பகிரப்பட்ட குறிக்கோள்களை அடைந்தமை நுட்பமானதும் அளவிடக் கூடியதுமாகும். இந்நிறுவனத்தின் அனைத்து முயற்சிகளும் , சாதகமான வெளியீடுகளை தரக்கூடிய வினைத்திறனுடன் வடிவமைக்கப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட செயற்பாட்டினை நோக்கியதாகவே அமைகின்றது.